வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருகிறது

சிவமயம்

இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.

ஆரம்பம்: விரோதி வரு (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

பிரதி விலை: சதம் 20

புத்-அள] யாழ்ப்பாணம்:- இராக்ஷத வரு ஆவணி மீ உள-உ வெள்ளிக்கிழமை (12-9-1975) [இல: உ

பண்புப் பணியாற்றும் பழமை வாய்ந்த பத்திரிகை

'இந்துசாதனம்' கால ஏணியில் எண்பத் தேழாமடியில் எழிலாக ஏறுகின்றது

சைவ பரிபாலன சபையாரின் தகைமை சால் தொண்டுகளில் அளப்பரிய பெருமை வாய்ந்தது இந்துசாதன வெளியீடு.

பின் வரும் பெருஞ் சந்ததிக்குப் பெற்றியாக விளங்க ஒரு சைவ சாதனத்தை அப்பொழுது அபிமானிகள் ஆரம்பித்தார்கள்.

எப்பொழுது ஆவணி இருபத்தெட்டாம் நாள் ஆயிரத் தெண்ணூற் றெண்பத் தொன்பதாம் ஆண்டு.

இன்று நிகழ்வது ஆயிரத்துத் தொழாயிரத் தெழுபத்தைந்தாம் ஆண்டு

எண்பத்தாறாண்டுகள் இயங்கி வந்த இந்துசாதனமே! என்ன நின் புகழ் சைவ நெறி நெடு வழியில் உய்வைக்காட்டும் வெளியீடே, விளங்கி வந்தாய் விளங்குவாய்.

ஏது நம்பிக்கை? அந்த நாவலர் பெருமானின் தினைவில் எழுந்தமையால்.

வாழ்க, வாழ்க, வாழ்கவே.

ப்பம்

நாவலரும் கோயிலும்

தொகுத்து அளித்தவர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்.
[எழுதி உதவியவர் சி. சீவரத்தினம்.]

(முன் வளர்ச்சி — 19)

6. பெற்றோர்களுக்கு அறிவுரை.

[ஐந்து அங்கங்கள் கொண்ட தொகுப்புக்கு ஒரு அநுபந்தமாக, பெற்றோரை நோக்கி நாவலர்பெருமான் வழங்கிய அறிவுரை அறிமற்பாலது; காலத்துக்கேற் பது. சிந்திக்கற்பாலதுமாம்.]

பிரபந்தம் :—

சில காலத்துக்கு முன்னே கவர்ண்மெண்டார் இத் தேசத்திலே சில இங்கிலீசுப் பள்ளிக்கூடங்களைத் தாபித்துச் சில வருஷம் நடத்தினார்கள், அவைகளிலே கிறீஸ்து சமயப் புத்தகமொன்றும் படிப்பிக்கப்படவில்லை. அங்கே சைவப் பிள்ளைகள் எல்லாரும் விபூதி தரித்துக்கொண்டே படித்து வந்தார்கள். அதைக் கண்ட பாதிரிமார்கள், கவர்ணமெண்டுப் பள்ளிக்கூடங்களில் நிலை பெற்றால் தங்கள் கருத்து வாய்க்காது என்று நினைந்து, இங்கிருந்த சில துரைமாரைத் தங்கள் வசப்படுத்திக் கவர்ண்மெண்டுக்கு வேறு நியாயங் காட்டி எழுதுவித்து அப் பள்ளிக்கூடங்களை எடுப்பித்துவிட்டு, அவைகளுக்குக் கவர்ண்மெண்டார் செலவழிக்கும் பணத்தைத் தங்கள் பள்ளிக்கூடங்களுக்கு ஆக்கிவித்துக்கொண்டு, அநீதியாகிய தங்கள் கருத்தையே நிறைவேற்றிக்கொண்டு வருகின்றார்கள், கவர்ண்மெண்டுப் பொருளுதவியைப் பெறும் பள்ளிக்கூடங்களிலே விபூதியை அழிக்கும்பொருட்டும், சமய நூல்களைப் படிக்கும் பொருட்டும், சமயப் பிரசங்கத்தைக் கேட்க வரும் பொருட்டும் பிள்ளைகளை வலாற்காரப் பண்ணுதல் கவர்ண்மெண்டாருடைய கருத்துக்கு முழுதும் விரோதமாம்.

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

யாழ். வண்ணை அரசடி விநாயகர்
அலங்காரத் திருவிழா

யாழ்ப்பாணம் வண்ணைர் பண்ணை அரசடி ஓங்கார விநாயகப் பெருமான் அலங்காரத் திருவிழாவும் இலட்சார்ச்சனையும் 7-9-75 முதல் 17-9-75 வரை நடைபெறும்.

தினமும் காலை ஒன்பது மணி முதல் பத்து மணி வரை இலட்சார்ச்சனையும் மாலை ஆறு மணி முதல் எட்டு மணி வரை சங்கீத கதாப் பிரசங்கமும் இரவு எட்டு மணி முதல் ஒன்பது மணி வரை பூசையும் இலட்சார்ச்சனையும அதன் மேற்றிருவுலாக் காட்சியும் நடைபெறும்.

பத்துத் தினங்களும் நல்லை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பரமாச்சாரிய சுவாமிகளின் இன்னிசைப்பிரசங்கமிடம்பெறும்.

இந்துக்கல்லூரி அதிபர்

பல்லாண்டுகளாக அதிபராக மகத்தான பணி புரிந்து ஓய்வெடுத்திருக்கும் திரு. இ. சபாலிங்கம் அவர்கள் இடத்திலே முன்னிக்கல்லூரியில் ஆசிரியராகவும், அருணோதயக் கல்லூரியிலும், மகாஜனக்கல்லூரியிலும அதிபராகவும் அரும்பணியாற்றிக் கல்வித் திணைக்களத்தில் உயர் பதவியிலமர்ந்திருந்த திரு. P. S. குமாரசுவாமி B A அவர்கள் 1-9-1975 தொடக்கம் அதிபராக நியமிக்கப் பெற்றிருக்கின்றனர். இவர்கள் கல்வி நிர்வாகத்துறையில் சிறப்புப் பட்டம் பெற்றவர்களுமாவர்.

நேயர்கள் நெஞ்சம்

நூல் வடிவில் வரச் செய்க

28-8-75 இந்துசாதனத்தில் "பண்ணியல்பாகப் பத்திமை யாற் பாடிப் பணிதல்" என்னும் தலையங்கத்தில் அடங்கிய சிந்தனைகளும், யோசனைகளும் சைவ மக்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருக்கும் வண்ணம் எல்லாம்வல்ல சிவபெருமானைப் பிரார்த்திக்கிறோம். மேலும் சைவப்பெரியார் உயர்திரு. பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஐயா அவர்களது கட்டுரைகளைப் புத்தக ரூபமாகச் சேர்த்து வெளியிடுவதும் பல அடியார்கள் விரும்புகிறார்கள். ஆகவேண்டியதைச் சைவ பரிபாலன சபையார் செய்வார்கள் என நம்புகிறோம்.

சு. சிவசுப்பிரமணியப்
சட்டத் தரணி,
கொழும்பு, 4-9-75.

வெண்ணெய்க் கண்ணனூர் முன்னைருநாள்
விளம்பிய

வாழ்த்து

முன்பிருக்குந் தமிழர்வளர் நாடுதொறும் விடுதொறும்
முறையாகச்சென்(று)
இன்பிருக்குங் கவியிசைத்தும் கதையுரைத்தும்
பொருள்விரித்தும்
என்கணட்டில்
அன்பிருக்க வானந்தத்தாண் டவக்கூத் தகத்திருக்க
அருக்தொண்டாற்றி
என்பிருக்கு முயிரிருக்கச் செயுமிந்து சாதனமே!
இனிதுவாழி.

20-4-1938. — ந. கி. பாரதி.

நிகழ்ச்சிகள் நெறியாக நிகழ வேண்டும்

மகா கும்பாபிடேகப் பெருவிழாவில் சிவத்தமிழ்ச் செல்வி விண்ணப்பம்

"மகாகும்பாபிடேக விழா அருள் நிகழ்ச்சிகளைக் காண்பது பெரும்புண்ணியமாகும்; பெருஞ் சாந்தி விழா — குட முழுக்குவிழா என்றெல்லாம் பேசப்படும் இந்தத் தெய்வ சாந்நித்தியம் வாய்ந்த திருவிழாவைக் காணும் பேறு பெற்றவர்கள் பெரும் பாக்கியவான்கள்; — இன்று அதிகாலையிலே பிரசித்தி பெற்ற இந்த அம்பாளின் திருச்சந்நிதியிலே நிகழ்ந்த மகாகும்பாபிடேக விழாவிலே கலந்து திருவருள் வெள்ளத்திலே தோய்ந்த நீங்கள் உங்கள் வாழ்வில் செய்தகொண்ட தவத்தின் பயனை உணர்ந்து பெருமையடையுங்கள்; கும்பாபிடேகம் நிறைவெய்தி விட்டதானே இனி வசதி வாய்த்த வேளை கோயிலுக்குச் செல்லுவோம் என்ற எண்ணத்தில் கோயிற்பக்கம் வருவதை யாரும் நிறுத்தி விடாதீர்கள்! இங்கே இது நாள் வரை நிகழ்ந்த அருள் பெருகுங்கிரியைகளும் இந்தக் கும்பாபிடேகமும் இன்று முதல் இங்கு திருவருள் வெள்ளத்தைப் பாய்ச்சிக்கொண்டிருக்கும் - இப் புண்ணியதினம் முதல் — மண்டலாபிடேகம்' வரை வந்து வழிபடுவதை யாருமே தவற விட்டுவிடக்கூடாது; இது மிக உவப்பான காலமாகும். இறைவனுக்குச் செய்யும் நீராட்டுப்பெருவிழா எங்கள் ஒவ்வொருவருக்கும் நீராட்டிய உணர்வை ஊட்டுகின்றதல்லவா? இவ்வாறு குறிப்பிட்டார் சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்.

கட்டுவன் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய மகாகும்பாபிடேகவிழாவன்று [10-9-75]

(வளர்ச்சி 3 ஆம் பக்கம்)

சைவ சமயத்தவரின் செயதிப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

இராக்ஷத ஹூ ஆவணி மீ உஎ-உ வெள்ளி

அரியதோர் அர்ப்பணம்

"வானெய்தும் இன்னமுதே என நைவேத்தியம்" வகுத்தனர், அன்றோர் ஆவணியில், சமயாபிமான அடியார்கள். 'இந்துசாதனம்' என்னும் 'இன்னமுதே'. அது. அவ்வடியார்களின் அகத்தில் அருந் தமிழ் வளர்த்துப் பெருஞ் சைவம் பேணிய நாவலர்பெருமானின் எண்ணம் தாண்டவமாடியது.

இவ் வின்னமுது சைவநெறியென்னும் கோயிலிலே தெய்வத்துக்கு நைவேத்தியமாக வகுத்துவரப் பெறுகின்றது. இந்த எண்பத்தைந்தாண்டுகளாக.

ஆரம்ப நன்னாளின் எழுபத்தேழாம் ஆண்டு, நாளை (13-9-1975) ஆரம்பமாகும் சீரினை அகங்குழைந்தானந்தத்துடன் வரவேற்கின்றோம், மாநில சைவ மக்கள் வாழ்த்துகின்றனர். பாரம்பரியம் ஒன்று பண்புடன் நிலவுகின்றது. சைவபரிபாலன சபையின் பெரிய சாதனை இந்துசாதனம் என்னும் அரிய அர்ப்பணமே.

'ஞாலம் நின்புகழேயாக, ஞாலம் கடந்த நாயகனை, எம் சிவபரம்பொருளை' இறைஞ்சுகின்றோம்.

x x x

மடங்கள் மடங்களாகவே வழங்க வேண்டும்

முன்னோர்கள் பலர் முக்கியமான பல தர்ம நியமங்களை அமைத்துப் பின்னுள் வரும் மக்கள் அவற்றைப் பயன்படுத்தும் வண்ணம் புண்ணிய கைங்கரியங்களைச் செய்தார்கள். திருக்கோயில், மடம், கல்விக் கழகம் என்று அறம் வளர நிலையங்கள் அமைத்தார்கள். அப் பெரியார்களுக்கு நன்றி செலுத்துவதற்கொரேயொரு வழி அந் நிலையங்களை நன்னிலையிற் பேணி வைத்தலே.

சென்ற வார இதழிலே இந்துசாதனத்தில் இத்தகைய புண்ணியக் கருமங்கள் பல புரிந்த ஒரு சைவாபிமானியின் வாழ்க்கை வரலாறு வெளியிடப் பெற்றது. மதம் வளர்தத மழவராயர் அவர்கள் பல விதமாகப் பணி புரிந்தனர். சிவத் தலமும் சைவ மடமும் செம்மையான கல்விக் கழகமும் மாகேசுர பூசைக்கு நிதியும் அமைத்துச் சிவநெறிச் செம்மலாக வாழ்ந்த இப்பெரியாரின் நாமம் என்றென்றும் விளங்க அன்னாரின் தருமங்களைச் சைவ மக்கள் பேணி நடத்துதல் கடமையாகும்.

மடங்கள் சத்திரங்கள் என்பனவற்றை உரிய முறையிற் பயன்படுத்தாது பொது நிலையங்களாக்குவது மாபெரும் பாதகமாவதுமன்றிக் குருநிந்தையுமாகும். புனித நிலையங்கள் புனித நிலையங்களாகவே விளங்க வேண்டுமல்லவா ?

கீரிமலையிலே மூன்று மடங்கள் முன்னாட்களில் மிகச் சிறப்பாகச் சைவ நிலையங்களாகத் திகழ்ந்தன. ஆனல் இப்பொழுது ஒன்றுமட்டும் அப் புண்ணிய வரிசையிலே இயங்குகின்றது. ஆங்கு புராணபடனம், சமயச் சொற்பெருக்கு யோகப் பயிற்சி முதலியன ஒழுங்காக நிகழ்கின்றன. இத்தொண்டு என்றும் நிலவ நாம் பிரார்த்திக்கின்றோம். ஏனைய திருமடங்கள் துரதிட்டமாகச் சீர்கெட்டுக் குலைந்து போயின! பொதுநிலையங்களாக இவை பயன்படுத்தப் பெறுவதைச் சைவ மக்கள் கண்டும் வாளாவிருக்கின்றனரே!

கந்தப் புராணம் பாராயணம் செய்யப்பெற்று... பழனைக் 'கந்தர் மடம்' என்ற பெயர் எழு... அன்பர் ஒருவர் சென்ற இதழிலே சுட்டிக்காட்டி ஆங்குள்ள மடத்தைப்பற்றியும் குறிப்பிட்டிருந்தனர். இவற்றையெல்லாம் சைவ மக்களும் சைவ சங்கங்களும் ... தருமத்தைக் கடமையா... என்று நாம் கருதுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னலமற்ற சேவைக்குத் தக்க பராட்டு

நல்லை. ஞான சம்பந்தர் ஆதீனத்தின் ஒன்பதாவது பீடாரோகண விழாவின்பொழுது சுவாமிநாதபரமாசாரிய சுவாமிகளால், சாவகச்சேரி மறவன்புலோவைச் சேர்ந்த திரு. மூ. கணபதிப்பிள்ளை அவர்கட்கு சைவசிகாமணி என்னும் பட்டம் வழங்கப் பட்டபொழுது சைவப் பெரியார்கள் பலர் திரு. கணபதிப்பிள்ளை அவர்களைப் பாராட்டி வாழ்த்தினர்.

திரு. கணபதிப்பிள்ளையவர்கள் நாவற்குழி கிராமச் சபை உறுப்பினராகப் பன்னிரண்டாண்டுகள் கடமையாற்றியும் மறவன்புலோ கிராம முன்னேற்றச் சங்கம், மறவன்புலோ பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், ஆகியவற்றின் ஸ்தாபகர்களுள் ஒருவராக இருந்தும் — மறவன்புலோ பள்ளங்குளப் பிள்ளையார் கோயிலின் அறங்காவலராகப் பணிபுரிந்தும் பெருந் தொண்டராக விளங்குகின்றார். இவர் முன்னாள் யாழ் இந்துக் கல்லூரித் தமிழ்ப் பாடசாலைத் தலைமை ஆசிரியராக நற்பணி செய்தனர்.

இவர் பல சைவசமய வெளியீடுகளை இலவசமாகத் தமது ஸ்ரீகாந்தா அச்சகம் மூலம் விநியோகித்துள்ளார்கள். 'சிவராத்திரிப்புராணம்' என்னும் பழையநூல் டலகாலமாக வெளியிடப்படாமல் இருந்துவருவதை யெண்ணிப்புதியதோர் பதிப்பை அண்மையில் மலிவு விலையில் வெளியிட்டு சைவ உலகில் பாராட்டைப் பெற்றுர்.

நாவலர் பிள்ளைத்தமிழ்

ஆக்கம்: "பழைய பாணி"

[பத்தாவது : சிறுதேர்ப் பருவம்.]

(முன் வளர்ச்சி — 75)

பாம்பினுக் கெதிர்தலையு மீனினுக் கெதிர்வாலும்
பவ்வமாய்க் காட்டியுய்யும்
பாங்குறுவி லாங்கொன்று பரவைநீர் விலாங்கெனப்
பார்த்துற வியந்த வையம்
ஈங்கிதென் இன்றமி ழிலக்கணப் பரவையினு
மெதிரிடுமோர் சொல்விலாங்கென்
றெண்ணவொரு தன்முதல் வினையாகி மூன்னமர்
வினையோ டிணங்கமுடிபும்
ஆம்பெய ரெனத்தோன்றி அங்கதற் கேற்குமுடி
பதனே டிணங்கவினையால்
அணையுமொரு பெயரிதென் றுன்னோர்கள்
பாராட்டு
மழகுதமி ழமுதமான
தேம்பிழியிலக்கணச்சுவைப்பயன் தேர்செல்வ
சிறுதே ருருட்டியருளே
செந்தமிழ் வளங்குலவ வந்தரு ளிளங்குழவி
சிறுதே ருருட்டி யருளே. (9)

தொல்காப் பியப்பொருட் கருவிருத் திக்குறட்
சூழ்சுவ ரெழுப்பியெட்டுத்
தொகையாதி சுற்று லயம்வகுத் தொழுக்கநற்
சுதைதீற்றி நீதிமெருகிட்
டொல்காப் புகழ்ப்பஞ்ச காவ்யசுவ ரோவியமொ
டுயர்சித்தி யாதிபன்மூன்
றோங்கெழில் மணித்தூபி யாக்கி யொளிர்சிவஞான
போதமுடி சூட்டியருளே
பில்கா தரத்தெருட் பெரியர்பு ராணமாம்
பெருகொளித் தீபமேற்றிப்
பிரானருட் டிருமுறைகள் பிரதிஷ்டை
யானசீர்ப்
பெருங்கலைக் கோயிலெனவே
செல்கா லமாதவச் சீர்தர வுருத்தமுதல்
சிறுதே ருருட்டி யருளே
செந்தமிழ் வளங்குலவ வந்தரு ளிளங்குழவி
சிறுதே ருருட்டி யருளே. (10,

நாவலர் பிள்ளைத்தமிழ் முற்றும்,

திரைப்படமே சிந்தனை!

—o—

மேற்கு நாடுகளிலே திரைப்படம் என்றால் பெரும் மதிப்பு. கிழக்கு நாட்டு மக்கள் இவ்வழக்கத்தை இப்பொழுது கொண்டிருக்கின்றனர்.

கிழக்கும் மேற்கும் பொருளாதார நெருக்கடியில் ஒன்றே. பசிப்பிணியும் பஞ்சமும் எங்கும் ஒரே விதம். ஆனல் மக்கள் திரைப்படம் பார்க்கத் தவறுவதில்லை! இதன் விபரீதம் என்ன ?

அமெரிக்காவிலே திரைப்பட இரசிகர்களின் தொகை ஏற்றமாகி விட்டதாம். கவலையைப் போக்குமே நாடகக்கலையே என்ற சிந்துப்பாட்டின் கருத்துக்கமைய சிந்தனைக்கு மருந்து திரைப்படம் என்ற கருத்து அங்கு நிலவுகின்றதாம்

யாழ்நகரில் மட்டும் எழு படமாளிகை இப்பொழுதுள்ளன. இன்னும் இரண்டு இம்மாதம் ஆரம்பமாகும். பசிக்கு விருந்து படம். அப்படித்தானே?

"ஆறிலொன்று! - போதாதா ?

பக்தர்: "ஒருவன் தன் வருவாயில் ஆறிலொரு பங்கை தனது செலவுகளுக்கு எடுக்கலாம்; மிகுதி ஐந்து பங்கும் "தென் புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல்' என்றித்தகைய தரும நெறிகளைப் பேணஅவன் பகிர்ந்துகொள்ளுதல்வேண்டும் — இந்நெறி பண்டைத் தமிழனுற் போற்றப்பட்டநெறி' என்று சிவத்தமிழ்ச் செல்வி கட்டுவன் முத்துமாரியம்பாள் கும்பாபிடேகவிழாவில் சொன்னர். தமிழன் பெருநெறி இன்றும் அப்படிப் பேணப்பட்டால்?

சித்தர்: "இன்று நடப்பதைச் சொல்ல வேண்டுமா? நல்ல வழி — 'வாழும் வழி' எது என்பதைப் பலர் உணர்கின்றார்கள்; ஆனல். அவர்கள் வழி விலகியே விடுகின்றனர்! அதற்கும் நெஞ்சுரம் வேண்டும்! அறம் வளர்த்த பழகிய தமிழனுக்கு தன்வருவாயில் ஆறிலொன்று போதாதா...?

— 'நாயன்மார் - நாதன்'"

பேச்சுப் போட்டி

மகாத்மா காந்தி அடிகளின் 106 ஆவது பிறந்த தின விழாவை முன்னிட்டு, கொழும்புப் பிராங்கிளப் பாடசாலை மாணவர்களுக்கிடையே ஒழுங்கு செய்யப் பெற்றுள்ள, பேச்சுப் போட்டி 1915 செப்ரெம்பர் 26 ஆம் திகதி மு. ப. 9 மணிக்கு வெள்ளவத்தை -

[வளர்ச்சி 6-ம் பக்கம்]

நாவலரும் - கோயிலும்

(1 ஆம் பக்கத்து வளர்ச்சி)

இப்பொழுது கர்ண்மெண்டார் இங்கிலீசுப் பாஷையை மாத்திரமன்றித் தமிழ் — சிங்களம் என்னுந் தேச பாஷைகளையும் விருத்தி செய்ய விரும்பி, அவைகளின் பொருட்டு வெகு பணஞ் செலவழிக்கின்றார்கள். எந்தச் சமயத்தார் தாபித்த பள்ளிக்கூடங்களேயாயினும் அவைகளிலே படிக்கும் பிள்ளைகளை வருஷந் தோறும் பரீக்ஷை செய்வித்து, அப் பரீட்சையின் பலத்துக்கு இசைய அந்த அந்தப் பள்ளிக்கூடங்களுக்குப் பொருளுதவிசெய்கின்றார்கள்;

கவர்ண்மெண்டார் பொருளுதவி செய்வது லௌகிக நூற் கல்விக் கன்றிச் சமய நூற் கல்விக்கன்று. சமய நூற் கல்வியை விருத்தி செய்ய விரும்புகின்றவர்கள் தங்கள் தங்கள் முதலைக் கொண்டே அப்படிச் செய்ய வேண்டுமென்பது கவர்ண்மெண்டாருடைய கருத்து.

பள்ளிக்கூடங்களுக்குக் கவர்ண்மெண்டாருதவும் பொருள் குடிகளிறுத்த இறைப் பொருளேயாம்.

இலங்கையிற் குடிகளுள்ளே பெருந்தொகையினர் சைவ சமயிகளும் பௌத்த சமயிகளுமேயாம்.

ஒரு சமயத்தாருடைய பொருளைக்கொண்டு அவர் மனசிலே நெய்யெனப் பதிந்த சமயத்துக்குத் தீங்கு விளைப்பதும், பொய்யெனப் பதிந்த சமயத்தை அரசைக் கொண்டு அவர் மனசுக்கு விரோதமாகவும் வலாற்காரமாகவும் தழுவுவிப்பதும் அநீதி! அநீதி!!

இப்படியெல்லாமிருக்க, புரோட்டெஸ்டாண்டுப் பாதிரிமார் கள் இங்கிலிசுப் பள்ளிக் கூடங்களோடு பல தமிழ்ப் பள்ளிக் கூடங்களையுந் தாபித்து, கவர்ண்மெண்டாருடைய பொருளுதவியைப் பெற்றுக்கொண்டு. அவைகளை அவர் கருத்துக்கு முழுவும் விரோதமாக நடத்துகின்றார்கள்,

பாதிரிமாருடைய தமிழ்ப் பள்ளிக்கூடங்களிலே படிப்பிக்கிற உபாத்தியாயர்கள் தமிழை நன்றாகக் கற்றுக்கொண்டவர்களல்லர்; அவர்களிற் பெரும் பான்மையோர் சம்பள நிமித்தம் கிறீஸ்து சமயத்திற் புகுந்தவர்கள்; கிறிஸ்து சமயத்திற் புகுந்தமையின் பொருட்டே அவர்கள் உபாத்தியாயருத்தியோகம் பெற்றவர்கள்

அங்கே படிப்பிக்கப்படும் புத்தகங்களிற் பெரும்பாலன, சுத்த தமிழ் நடையின்றி இலக்கணப் பிழைகளினால் நிறைந்தவைகளும் சைவ தூஷங்களினாற் பொதிந்தவைகளுமாய் உள்ளவைகள்

அங்கே படித்தவர்கள் திருத்தமாகிய கல்வியில்லாதவர்களும் ஒரு சமயத்திலும் பற்றில்லாத நிரீச்சுரவாதிகளுமாகின்றார்கள். அவர்கள் பேசுந் தமிழோ அந்நிய பாஷை நடையோடு கலந்த அசுத்தத் தமிழ்,

கல்வி முதலியவற்றின் பொருட்டுத் தங்களை அடுத்தவர்களை அவரவர் மனசாக்ஷிக்கு விரோதமாகவே நடக்கும் பொருட்டு வலிந்து ஏவ ஏவ, நிரீச்சுரவாதமும் போலிச் சமய நடையுந் தலைப்பட்டன, அவை தலைப்படத் தலைப்பட பகற் கள்ளர் தொகை மிகப் பெருகிவிட்டது! இராக் கள்ளருக்குத் தப்புவது எளிதெளிது! பகற் கள்ளருக்குத் தப்புவது அரிதரிது!

(வளரும்)

கடையிற்சுவாமி குருவார அன்னசத்திரம்

1-5-74 தொடக்கம் 30-4-75 வரையுள்ள வரவு செலவுக் கணக்கு

	ரூ.	சி.
திரு. சி. செல்லப்பா	50	00
,, S தியாகராஜா (ராஜா தியட்டர்)	45	00
,, ம. நடராஜா (ரதிவார்ச்)	25	00
,, V M V, நல்லநாதன் யாழ், மெற்றல் இன்டஸ்ரீஸ்	25	00
	20	00
,, S A. செல்லையா & Co	25	00
துரை & Co,	25	00
திரு. V. குகமூர்த்தி	10	00
,, T. இரத்தினசிங்கம்	10	00
சு. ம. ச. பெரியகடை	10	00
,, S. குமாரவேலு ஆசிரியர்	10	00
,, V M நாகலட்டினம் செட்டியார்	10	00
,, அ. நல்லதம்பி, கன்னுதிட்டி	10	00
கிருஷ்ணபவான், பெரியகடை	10	00
கல்கமுவா ஸ்டோர்ஸ், பெரியகடை	5	00
A. S S & Bro பெரியகடை	25	00
திரு K, சோமசுந்தரம், கன்னுதிட்டி	50	00
,, S. பாலசிங்கம், பிரப்பங்குளம்	25	00
,, இ. முருகேசு	2	00

பொருள் உதவியாளர்கள்

மில்க்வைற் தொழிற்சாலை 1 மூடை அரிசி

மடத்துக்கு வந்த அரிசி 3 படி

பெரியகடை அன்பர்கள் மற்றும் பொருள் தந்து உதவினோர்கள்

1-5-74 தொடக்கம் 30-4-75 வரை உள்ள வரவு செலவுக் கணக்கு

	வரவு	செலவு
அடியார்கள் பணம்	392 00	
வாடகை	300 00	
கோயில் நன்கொடை	600 00	
சாக்கு விற்ற வரவு	2 00	
மின்சாரம்		111 60
கோட்டுச்செலவு		459 50
அன்னதானம் செலவு (வாங்கிய அரிசி உட்பட)		243 53
பூசைச் செலவு		329 83
பந்தல் வேலி		249 45
சில்லறை		15 15
மேலதிகச் செலவு		115 06
	1409 06	1409 06

R. C. மன்மதராயன்
தனுதிகாரி
குருவார அன்னசத்திரம்
9-9-75 79, 12-9

நிகழ்ச்சிகள் நெறி

1 ஆம் பக்கத்து வளர்ச்சி

மூலை சிறப்புச் சொற்பொழிவாற்றும்போதே மேற்கண்டவாறு செல்வியவர்கள் கூறினர் விழா ஆரம்பத்தில் முத்துமாரியம்பாள் ஆலய கூட்டுப் பிரார்த்தனைச் சபையினரும் — யாழ். நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக்கழகத்தினரும் பஜனை நடாத்தினர். சிவச்செல்வி தங்கம்மா தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:—

"திருக்கோயில்களில் திருவிழாக்களை திருவிழாக்களாக நிறையச் செய்ய ஆங்காங்குள்ள சைவ மக்கள் முன்வரவேண்டும்; எத்தனையோ ஆலயங்களிலே நித்தியம் திருவிளக்கேற்றுவதற்கு வேண்டியளண்ணெயின்றிக் கஷ்டப்படுகிறார்கள் ஆங்குள்ள அர்ச்சகர்கள் — ஆனால்; திருவிழா என்றதும் அங்கே வீதிக்கு-எத்தனை சிகரம் கட்டலாம்— மற்றென்னென்ன அலங்காரங்கள் செய்யலாம் — எத்தகைய பென்னம் பெரிய நிகழ்ச்சிகளை ஏற்பாடுசெய்யலாம் என்று அலைகின்றார்கள் சில உபயம் செய்யும் பத்தர்கள். இவர்களின் இம்மனநிலைமாறவேண்டும். சிவ கைங்கரியங்களைச் செய்யவும் சிவனிணைவை ஊட்டவும் தக்க நிகழ்ச்சிகளை ஆலயங்களிற் பரப்ப வேண்டும்; பக்திச் சூழ்நிலையைப் பெருக்கிவரவேண்டும். பரம் பொருளின் பெரும் புகழைப் பாடுங்கள் - பேசுங்கள் - திருமுறைகள் கோயில்களில் ஒலிக்கட்டும்; கூட்டுப் பிரார்த்தனை மன்றங்கட்கு கோயில் விழாக்களில் சிறப்பிட மளியுங்கள்; அன்னை அபிராமிப் பட்டரியான சிலத்தை நினைத்துப் பார்த்தால் எப்உள்ளமினிக்க வேண்டாமா? ஆலயத்திலே அருட்பொலிவோடு விளங்கும் கடவுளைக் கடவுளாகவே காணவேண்டும். சிலர் அங்கு கல்லே யிருப்பதாகக் கருதுகின்றனர், இது அறியாமையாம். வழிபாட்டில் நினைத்த பத்தனுக்கோ உலகத்தைத் தெரியாது; அங்கிலேயறியாப் பித்தனுக்குக் கடவுளைத் தெரியாது. "மரத்தை மறைத்தது மாமத யானை — மரத்துள் மறைந்தது மாமதயானை' என்றின்னோரன்ன விளக்கங்களுடன் அரியதா யமைந்த இச்செஞ்சொற்பணி இரண்டு மணித்தியாலங்கள்வரை நிகழ்ந்தது. பெருந் தொகையான அடியார்கள் ஆடாமல் அசையாமற் சிலைபோலிருந்து கேட்டின்புற்றனர். அடுத்து பண்ணிசைமணி வீ, ரி. சுப்பிரமணியம் அவர்களாலே திருமுறை இசை விருந்தளிக்கப் பெற்றது. அன்று காலையில் பிரதம குரு கிரியா வித்தகர் சிவதிரு. க. சிவபாதசுந்தரக் குருக்கள் 'அன்னை திருவருள்' எனுப்பொருளில் உரை நிகழ்த்தினர்கள். —('கரதன்')

திருச்சிற்றம்பலம்

நாளென் செயும் வினைதானென் செயுமென்ன நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுந்தம ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேயன்று தோன்றியதே

திருச்சிற்றம்பலம்

—கந்தரலங்காரம்.

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில்

திருவிழாக் கால விசேட நிகழ்ச்சிகள்

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயிற் திருவிழா நேற்று (11-9-75) ஆரம்பமாயுள்ளது. தினமும் கூட்டுப்பிரார்த்தனையும் சமயச் சொற்பொழிவும் இடம்பெறும். பண்டிதை. ச. அமிர்தாம்பிகை, ஆசிரியர் ச. விநாயகமூர்த்தி, செல்வி, புஷ்பா செல்வநாயகம், செல்வி தங்கம்மா அப்பாகுட்டி, திரு. க. உமா மகேஸ்வரன் ஆகியோர் கலந்து சொற்பெருகாற்றுவர். 19-9-75 இல் தேர்த் திருவிழாவும், 20-9-75 பிற்பகல் தீர்த்தத் திருவிழாவும் நிகழும். தீர்த்த விழாவன்று 8-30 மணிக்கு இன்னிசை விரிவுரை 'அருட் கவி' சீ: விநாசித்தம்பி அவர்களால் நடாத்தப்பெறும்.

விநாயகர் ஆலய அலங்காரத்திருவிழா

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய அலங்காரத்திருவிழா 10-9-75 இல் ஆரம்பமானது. 21-9-75 தீர்த்தவிழா நிகழும். தினமும் மாலையில் பண்ணிசை நிகழ்ச்சி இடம்பெறும்.

சைவ சமய பாடப் பரீட்சை

சைவ பரிபாலன சபையார் பாடசாலை மாணவர்களுக்காக ஆண்டு தோறும் நடாத்தும் சைவ சமய பாடப் பரீட்சை 9-11-75 -ல் நடைபெறும்;

விண்ணப்ப முடிவு திகதி 15-9-75. விண்ணப்பப் படிவங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. மேலும் தேவையானோர் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம் 1-9-75.

சி. சிவரத்தினம், பரீட்சைக் காரியதரிசி

போதனைப் பொன் ஏடு

"இறை — ஒளி"

சாதனை ஈதென்றும்! சைவத் தமிழகத்திற்
போதனைப் பொன்னேடாய்ப் போற்றமிந்து —
சாதனமே!
எண்பத்தே ழாகுமிவ் வேணிப் படிமேலும்
எண்ணத் தகைசெய்வா மே!

சைவபரிபாலனசபைசரித்திரம்

(50 ஆம் வருடப்பூர்த்திப் பொன் விழா மலரிற் பத்திரிகாசிரியர் கூற்று 1938)

(முன் வளர்ச்சி — 9)

VII குருவகுப்பு

மன்மதவரு கார்த்திகைமீ 3உ (20 11-1895) கூடிய நிருவாகசபைக் கூட்டத்தில், பிராமண குருமார், சைவக் குருமார் என்னும் இருதிறத்தினருடைய பிள்ளைகளுள்ளும் ஆசார அனுஷ்டான முடைய இன்னுஞ் சில சைவப்பிள்ளைகளுள்ளும் ஒரு தொகையினரைச் சேர்த்து சைவசமய நூல்களும், கருவி நூல்களும் அவர்களுக்குப் பயிற்றுவதற்கும் பிரசங்கம் செய்யப் பயிற்றுவதற்கும் ஏற்ற ஒழுங்குகள் செய்ய வேண்டுமென ஒரு நிர்ணயம் நிறைவேற்றப்பட்டது இதன்படி குருவகுப் பொன்று மன்மத வருஷம் கார்த்திகை மாதம் ஆரம்பிக்கப்பட்டது, ஈ. ஏரமபையர், மு கந்தராஸ ஐயர், ஸ்ரீ. த. கைலாசபிள்ளை என்னுமிவர்களே அக்குருவகுப்புப் பிள்ளைகளுக்கு ஆசிரியராக விருந்து கல்வி பயிற்றி வந்தார்கள். தூரித்த ஊர்களிலிருந்து வரும் குருவகுப்புப் பிள்ளைகளும் ஆசிரியர்களும் அங்கிருத்தற்காகிய விடுதிச் சாலையும் ஏற்படுத்தப்பட்டது 30 பிள்ளைகள் வரையில் இவ்வகுப்பில் படித்துக் காலகதியில் திறமைவாய்ந்த குருக்கள்மார்களாகவும், தேசிகர்களாகவும், பிரசாரகர்களாகவும், கருமம் ஆற்றினர். இவ்வகுப்பிற்குரிய காரியங்களை நிருவகித்து நடாத்தியவர் சித. ப. மு. பசுபதிச் செட்டியாராவர். (வளரும்)

பேச்சுப் போட்டி

(2ம் பக்க வளர்ச்சி)

இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறும்.

போட்டியில் பரிசு பெறுபவர்களுக்கு 1975 ஒக்ரோபர் 2 ஆம் திகதி நடைபெறும் காந்தி பிறந்த தின விழாவில் பரிசு வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THOUGHTS TO BE TREASURED

அங்கிசெய்து ஈசன் அகலிடஞ் சுட்டது
அங்கிசெய்து ஈசன் அலைகடல் சுட்டது,
அங்கிசெய்து ஈசன் அசுரரைத் சுட்டது,
அங்கி அவ்வீசற்குக் கையம்பு தானே.

By fire did the Lord destroy the expansive world,
By fire did the Lord destroy the roaring seas,
By fire did the Lord destroy the cruel demons,
Fire indeed is the handy weapon of the Lord.

திருமந்திரம்

நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாதனின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

திருஞானசம்பந்தர்

Hindu Organ

FRIDAY, SEPTEMBER 12, 1975

COMBAT THE CLOUDS

No rain — no grain. This is the theme of talk all over the country.

In deep contrast, in the Northern regions of the Indian sub-continent, the comment is — all rain — no grain. Deluges destroy entire villages leaving behind dreaded devastation.

These freakish and frantic outbursts of nature can yet be confronted with greater powers — the power of prayer.

In Madras scientific researches have enabled artificial rainfall. It does not, however, mean that man has got the better of nature. He has been rewarded for his persistent prayer for showers by the Almighty.

The seeding for rain drops is a scientific method of bringing the rain clouds to bear fruit. Chemical compounds like Silver Iodide are scientifically used as seeds and are 'sown' in large areas of clouds forcing the fall of rain water.

In the arid North for some time clouds appear regularly in the evening and disappear disappointing the anxiously awaiting cultivators. What is very pathetic is that clouds appear tantalisingly. It is in such adverse circumstances that man should endeavour with devotion to God to exact some use from the deceptive clouds by arresting them by means of the spraying of Silver Iodide.

The time has arrived for serious attention to be paid to the need for scientific research on this subject after the manner in which other countries have successfully obtained 'artificial rain'. The geographical set up of our Island may be different, However, scientists can persevere and explore further possibilities.

Here is a problem of first rate importance demanding priority of consideration. We are confident that the Authorities will set about this affair in right earnest and immediately.

DANCE OF SHIVA

Dr. Ananda K Coomaraswamy)

(Continued from last issue)

Our Lord dances His eternal dance.
The form of the Shakti is all delight —
This united delight is Uma's body;
This form of Shakti arising in time
And uniting the twain is the dance"
His body is Akash, the dark cloud therein is Muyalaka,
The eight quarters are His eight arms,
The three lights are His three eyes,
Thus becoming He dances in our body as the congregation."

This is His dance, Its deepest significance is felt when it is realized that it takes place within the heart and the self. Everywhere is the heart. Thus also we find another verse:

"The dancing foot, the sound of the tinkling bells,
The songs that are sung and the varying steps,
The form assumed by our Dancing Guru-para —
Find out these within yourself, then shall your letters fall away."

To this end, all else but the thought of God must be cast out of the heart, that He alone may abide and dance therein, In Unmai Vilakkam, we find:

"The silent sages destroying the threefold bond are established where their selves are destroyed. There they behold the sacred and are filled with bliss This is the dance of the Lord of the assembly, 'whose very form is Grace'."

With this reference to the 'silent sages' compare the beautiful words of Thirumular:

"When resting there they (the yogis who attain the highest place of peace) lose themselves and become idle. ....Where the idlers dwell is the pure Space. Where the idlers sport is the Light. What the idlers know is Vedanta. What the idlers find is the deep step therein."

Shiva is a destroyer and loves the burning ground. But what does He destroy? Not merely the heavens and earth at the close of a world cycle, but the fetters that bind each separate soul Where and what is the burning ground? It is not the place where our earthly bodies are cremated, but the hearts of His lovers, laid waste and desolate The place where the ego is destroyed signifies the state where illusion and deeds are burnt away: that is the crematorium, the burning ground where Shri Nataraja dances, and whence He is named Sudalaiyadi, Dancer of the burning-ground. In this simile, we recognise the historical connection between Shiva's gracious dance as Nataraja, and His wild dance as the demon of the cemetery.

This conception of the dance is current also amongst Shaktas, especially in Bengal, where the Mother rather than the Father-aspect of Shiva is adored Kali is here the dancer, for whose entrance the heart must be purified by fire, made empty by renunciation. A Bengali hymn to Kali voices this prayer:

"Because Thou lovest the Burning-ground
I have made a Burning-ground of my heart—
That Thou, Dark One, haunter of the Burning-ground,
Mayest dance Thy eternal dance,
Nought else is within my heart, O Mother:
Day and night blazes the funeral pyre:
The ashes of the dead, strewn all about,
I have preserved against Thy coming,
With death-conquering Mahakala neath Thy feet
Do Thou enter in, dancing Thy rhythmic dance,
That I may behold Thee with closed eyes.'

Returning to the South, we find that in other Tamil texts the purpose of Shiva's dance is explained In Shivajnana Siddhiyar. Supaksha, Sutra V. 5, we find,

"For the purpose of securing both kinds of fruit to the countless souls, our Lord, with actions five dances His dance." Both kinds of fruit that is Iham, reward in this world, and Param, bliss in Mukti.

(To be continued)

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்;

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday September 12, 1975.

EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

PARTITION NOTICE

IN THE DISTRICT COURT OF MALLAKAM

Ponniah Arunasalam of Alaveddy
Vs. Plaintiff
No. P/1619

1 Marimuttu Panditharatnam
2 Marimuttu Thangeswaran
3 Marimuttu Sritharan
4 Marimuttu Pascaran
5 Sukuna daughter of Marimuttu
6 Vanitha daughter of Marimuttu all of Alaveddy. The 3rd to 6th defendants being minors by their guardian-ad-litem the 2th defendant
7 Kanapathippillai Marimuttu of Alaveddy
8 Achchimuttu widow of Sellathurai of do
Defendants

It is hereby notified that action No. P / 1619 has been instituted in the District Court of Mallakam under the Partition Act No. 16 of 1951 for the partition / sale of the land called "Nellavudai" in extent 2 Lms. V. C. and 1¾ kulies and situated at Alaveddy.

The defendants in the aforesaid action are summoned to appear in Court, on the 18th day of September, 1975 at 9 a. m.

This day of September 1975.

By order of Court,
Sgd. Joseph Marion
Registrar.

21. 12-9

PARTITION NOTICE

IN THE DISTRICT COURT OF MALLAKAM

Seenivasagam Sivasambu of Thyiddy
Vs. Plaintiff
No. P / 1618

1 Nagalingam Kandiah and wife
2 Sinnathankam both of Thyiddy
3 Chellappah Thambirajah of do
4 Mappanar Sinnadurai and wife
5 Sinnamma both of do
6 Sinniah Sivacolunthu of Vayavilan and wife
7 Muthachchy of Thyiddy
Defendants

It is hereby notified that action No. P / 1618 has been instituted in the District Court of Mallakam under the Partition Act No. 16 of 1951 for the partition / sale of the land called "Ampalampai" in extent 36, ¾ Lms. V.C. and situated at Thyiddy.

The defendants in the aforesaid action are summoned to appear in Court on the 18th day of September 1975 at 9 a. m.

This day of September 1975.

By order of Court
Sgd. T Kulaveerasingam
for Registrar.

20. 12-9